1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது ஆரம்பிப்பதற்கு இல்லை.

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டங்கள்.

*2132 **திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டும், குறுக்கப்பட்டும் விட்டன என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை முனைப்புடன் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுக்காக இருக்கின்ற திட்டங்களிலோ அல்லது வேறு பல நல்ல நலத் திட்டங்களிலோ மாற்றங்களோ அல்லது குறைக்கப்படவோ இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு தாயகம் திரும்பியோர்களிலும், மலைத் தோட்டங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வணிகம் செய்வதற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீலகிரி மலையில் வாழ்கின்ற அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கியிருக்கக்கூடிய குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக அடிக்கடி புகார்கள்

வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அவர்களுக்குப் புதிதாக குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலகிரித் தோட்டத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இருக்கின்ற வீடுகள் வசதியின்மையாக இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அது அரசின் சார்பாகப் பரிசீலிக்கப்பட்டு தேவைப்பட்டால், அவைகள் பழுதுபார்க்கப்பட்டும், அவசியம் ஏற்பட்டால் புதிதாக கட்டிக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு மலைத் தோட்டங்களில் கொடுக்கப்படுகின்ற கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது குறிப்பு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எந்த குறிப்பும் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விகளை ஒட்டி அது பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியோருக்கு கூட்டுறவு மில்களில் வேலை வாய்ப்பு அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வேலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பவர்கள் பல ஆண்டுகளாக நிரந்தரம் இல்லாமல் பல்வேறு கேட்டகிரியில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல் அவர்களுக்கு கிடைக்கின்ற சலுகைகள் பலயிடங்களில் பலரால் மோசடி செய்யப்பட்டு பல்வேறு புகார்கள் அரசுக்கு வந்து இருக்கின்றனவா? அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியவர்களைப் பயன்படுத்தி சில இடைத்தரகர்கள் தவறு செய்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அது குறித்து பரிசீலனை செய்ய ஒரு

குழுவை அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. அவர்களின் அறிக்கைக்குப் பின்னால் பூர்வாங்கமான நடவடிக்கை அரசின் சார்பாக மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்து இருக்கும்படியான தாயகம் திரும்பிய தமிழர்கள் அதிகப்படியாக குவிந்துள்ள இடம் நீலகிரி தான். 65 ஆயிரம் பேர் அங்கே வந்து தங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலே தேயிலைத் தோட்டங்களில், புதிதாக உண்டாக்கப்பட்ட தோட்டங்களில் புதிதாக வீடுகள் கட்டப்பட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதை நானே பார்த்தேன். ஆனால் வீட்டுக்கு இடமே இல்லாமல், வீடும் இல்லாமல் பல ஆயிரக்கணக்கான பேர்கள் அதுவும் குறிப்பாக கூடலூர் தாலூகா முழுவதும் பரவலாக இருக்கிறார்கள். அவர்கள் குடியிருப்பதற்கு குறைந்தபட்ச தேவையான இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கும் அதேமாதிரி அவர்கள் விவசாயம் செய்வதற்கு—இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயம் செய்யக் கூடியவர்கள்—அவர்கள் பல வருடங்களாக கேட்டுக் கொண்டு வருகின்ற நிலங்களை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து வாழ்வளிக்க இந்தப் புதிய அரசு முன்வருமா? இந்த புதிய அரசின் மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு அரசு ஒரு திட்டம் தீட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான கருத்தைத் தெரிவிக்கிறார்கள். விளக்கமான விவரங்களைத் தருவார்களேயானால் அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக மேற்கொள்ளும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னாலே பர்மா தமிழ் அகதிகளுக்குப் பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டை கிராமத்திலே வீடுகள் அமைக்கப்பட்டன. தற்போது அந்த வீடுகள் பழுதடைந்து குடியிருக்க முடியாத சூழ்நிலையில் உள்ளன. எனவே, அவர்களுக்கு மீண்டும் புதிய வீடுகளைக் கட்டித் தருகிற நிலையை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளை அரசுத் துறையின் மூலமாக நேரடியாக அணுக, தேவைப்படுகின்ற உதவிகளை அரசு நிச்சயமாகச் செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் நெல்லை மாவட்டத்திலே அதிகம் இருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியிலுள்ள பேட்டையில், கூட்டுறவு நூற்பாலைகளில் அவர்களுக்கு வேலைகள் தரப்பட்டிருக்கின்றன. வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் அந்தக் காலனிகளுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு போன்ற வசதிகள் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட காலனிகளுக்கு முன்னுரிமை தந்து அந்த அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் மூலமாக சென்னையை ஒட்டியிருக்கின்ற புறநகர் பகுதிகளில் வீடுகள், இடங்கள் ஒதுக்கப்பட்டும், அவைகள் அவர்களால் பயன்படுத்தப்படாமல் பல ஆண்டுகளாக சீரழிவதோடு விலை பேசப்படுகிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதைத் தடுக்கும் நடவடிக்கை உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக அறிந்துகொள்வதற்காக ஒரு குழுவை அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விவரங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

1989 அக்டோபர் 31]

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பிய தமிழர்கள், குறிப்பாக நீலகிரி மலையில், சிறு விவசாயத்திலே குறிப்பிடத்தக்க அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அந்த நிலத்தை விட்டு வெளியேற்றுகின்ற மிரட்டல்கள் அவ்வப்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, அவர்களை பாதுகாக்கக் கூடிய வகையில், அந்த நில வெளியேற்றம் தடுக்கப்படுவதோடு அந்த நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்கக் கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாயகம் திரும்பியோர் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற நிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். அப்படி எங்கு நடைபெறுகிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவார்களேயானால் அரசுத் துறைகளின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மயிலாடுதுறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்.

* 2354 **திரு. ஏ. செங்குட்டுவன்:** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மயிலாடுதுறையில் ஐ.டி.ஐ. ஒன்றை அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இப்பொழுது இல்லை. எனவே அதைப் பற்றிய விவரம் தேவையில்லை என்று கருதுகிறேன்.